# ஒரு சொல்

"உம்! என்னமோ, எல்லாத்துக்கும் நல்ல லிபி வேணும். என்னை மாமியார் இல்லாத இடமாகப் பார்த்துக்கொடுத்தும், ஆயில்யத்திலே பிறந்தும், சுகமில்லை. இங்கே, ஒரு பக்கம் ரிடையராகி நிர் விசாரமாய் இருக்கிற மாமனார். இன்னொருபக்கம் அலக்கழிக்கிற குழந்தைகள். அதுகளுக்குப் பள்ளிக்கூடத்துக்குச் சமையல் பண்ணி சிங்காரித்து அனுப்புகிறதற்குள்ளே தாவு தீர்ந்து விடுகிறது! நீங்கள் என்னமோ என்னை 'அம்மாமி'ன்னு எண்ணிக்கொண்டு, என் கஷ்டம் அறிகிறதே இல்லை! ஏதோ சின்னஞ்சிறு குடித்தனம் அழகாகச் செய்தோம் என்ற ஆசைக்கே வழியில்லை!"

"பத்மா! குழந்தைகளை மட்டும் தாக்கிப்பேசாதே. எனக்குப் பொறுக்காது! என் அம்மா வியாதியாக்கிடந்தது முதற்கொண்டு நான் அவர்களை வளர்த்துக்கொண்டு வந்து இருக்கிறேன். அவள் போனப்புறமும் ஒரு வருஷம் வளர்த்தேன் என் கைகளாலே - இப்போ உத்தியோகம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் அவர்களைக் கவனிக்க எனக்கு நேரமில்லை?"

"உம், சொல்லமாட்டீர்களா? அப்படித்தானேயிருக்கும் என்னைப் பெற்று வளர்த்தவர்களுக்கும்!"

"இதை முதலிலேயே சோதித்துப் பார்த்துப் பெண்ணைக் கொடுக்க உன் அப்பா, அம்மாவுக்குப் புத்தியில்லையோ?"

"உம், கடைசிவரை நான் உங்கள் மனுஷாளைத் தாங்கணும்! நீங்கள் என் அப்பா, அம்மாவைத் தூக்கி எறிந்துபேசணும்! உலகத்து நியாயம் இருக்கே...."

பத்மாவின் பேச்சு முடியவில்லை "கத்திக்கொண்டிரு! எனக்கென்ன!" என்று கூறும் பாவனையில், அவள் கணவன் ராஜு, சைக்கிளை ஒரு தள்ளு தள்ளிக்கொண்டு விடுவிடுவென ஆபீசுக்குப் புறப்பட்டுவிட்டான்.

கூடத்தில் இருந்த ஏழெட்டு எச்சில் இடங்களையும் சுத்தம் செய்து கொண்டிருந்த பத்மாவுக்கு, கணவனின் அலட்சியம், சாட்டை கொண்டு தன்னை விறுவதுபோல இருந்தது.

இதுபோன்ற காரசாரமான விவாதம் அதற்கு முன் நிகழ்ந்ததில்லை அவ்விருவரிடையே. பத்மாவும் நல்ல பெண்தான். அவனும் நல்லவன் தான். ஆனால் என்ன காரணமோ, கொஞ்ச நாட்களாக அவர்கள் இருவருக்கும் சிறு சிறு புரைசல் எண்ணங்கள் தோன்றி வந்தன. சிறு சிறு விசாதங்கள் நடந்து வந்தன. இன்றோ பேச்சின் தொனியும் காரசாரமாக இருந்தது. விவாதம் வலுத்து இருந்தது.

பக்கத்துவீட்டிலே ராஜமும் அவள் கணவனும் செய்கிற இன்பக் குடித்தனம்போல தன் குடித்தனம் இல்லையே என்ற குறை பத்மாவுக்கு. அத்தகைய குறை அவளுக்கு ஏற்பட நியாயம் உண்டு என்ற நினைப்பு அவனுக்கு உண்டு. அதனால் அவன் பத்மாவைக் கோபிப்பதில்லை. ஆனால், நடக்க முடியாததைக் குறித்து வாய்க்கு வாய்ச்சொல்லிக்கொண்டு ஆங்காரப்படுவதிலே என்ன பயன்? இந்த அறிவு அவளுக்கு இருக்க வேண்டாமா என்றுதான் அவனுக்கு அன்று கோபம் வந்தது.

தன்னுடைய அன்னை இறந்து போனதால், நாதியற்றிருக்கும் தன் தந்தைக்கும் தம்பி, தங்கையருக்கும் செய்ய வேண்டியவள் தன் மனைவிதானே? அதை அவன் உணர வேண்டாமா? மறக்கலாமா? தான் செய்துகொண்டிருக்கவில்லையா தன்னாலியன்ற பணிகளை, அது நாள் வரையில்? தான் உத்தியோகம் மேற்கொண்டதால், தனக்கு முன்பு இருந்த பொறுப்பை மனைவி ஏற்று நிர்வகிக்க வேண்டியதுதானே நியாயம்? ஏன் பத்மாவுக்கு இது தெரியாமற் போய்விட்டது? புக்ககம் வந்த ஆறேழு மாதங்களுள் இவ்வளவு வெறுத்துக்கொள்கிறாளே? இது அழகா? இப்படித்தான் அவன் எண்ணினான்.

அவள் கூண்டுப் புலி - சர்க்கஸ் புலி. அவனோ, வேண்டுமென்றே, அவளைச் சீண்டுகிறான், வெருட்டுகிறான், அடக்குகிறான். அவள் நினைத்தாள் இப்படி!

கணவனின் அலட்சியத்தைக் கொஞ்சநேரம் வரை மறக்க முடியவில்லை பத்மாவுக்கு. ஆனால் அப்புறம் அதை மறக்கடித்துவிட்டது, அவளுடைய சிநேகிதி சீதாவின் வருகை.

இருவரும் பலவிஷயங்கள் பற்றிப் பேசிவரும்போது, "ஏன், சீதா, உன் உடம்பு இவ்வளவு இளைத்திருக்கிறது?" என்ற பத்மா அவளைக் கேட்டாள்.

"என் உடம்புக்கென்ன, பத்மா? - அவருக்குத்தான் உடம்பே நேரில்லை. ஆஸ்பத்திரியிலே இரண்டு மாதம் சேர்த்துப்பார்த்தோம். எத்தனைநாள் அங்கே இருக்க முடியும்? வீட்டுக்கு அழைத்து வந்தோம். அப்புறமும் அவருக்குக் குணமில்லை. எனக்கு மனசு கவலைதான். அவருக்கு வேண்டியவற்றை நானே செய்தால்தான் எனக்குக் கொஞ்சமாவது ஆறுதலாய் இருக்கிறது. இரவோ, பகலோ மனசுக்குக்கஷ்டம் தெரிகிறதில்லை. உடம்பை அலட்டிக்கொண்டாலும், அதனால் ஏதோ கொஞ்சம் இளைத்திருக்கும் போலிருக்கு. உடம்பு!'

இப்படிச் சொன்னாள் சீதா.

சீதாவின் இந்தப்பதில் பத்மாவின் மனதிலே பதிந்தது. அவளுடைய சொற்களும் பத்மாவின் கவனத்தை விட்டு அகலவேயில்லை. அன்று முழுதும். சீதாவின் அந்த விடை, பத்மாவின் செயலிலும் பேச்சிலும் நயத்தைப் புகுத்தியவண்ணம் இருந்தது - அன்று மாலை வீடுமீண்ட கணவனிடம் பத்மா கடுமைகொள்ள இயலவில்லை.

இந்த விரும்பத்தக்கநிலைமை முறியுமுன்பே வேறொரு விவேகப் பேச்சின் ஆட்சியிலே ஈடுபட்டாள் பத்மா.

"பத்மா! பார்த்தாயா என் பெண் எழுதியிருக்கும் கடிதத்தை! இந்தா, படி!" என்று கூறியவண்ணம் அம்மாளு மாமி வந்தாள் இரண்டு நாள் கழித்து.

பத்மா கடிதத்தை வாங்கிப் படித்தாள். நாள் முழுக்கக் காரியம் சரியாயிருக்கிறது - வீட்டிலே மாமியாருக்கு உடம்பு நேர் இல்லை, நாத்தனார்கள் எல்லோரும், பொறுப்போ, நல் எண்ணமோ தமக்கு அவசியமில்லை என்று எண்ணுபவர்கள் எங்கும் எவரிடமும் அதேபோல இருப்பவர்கள் என்னிடம் எப்படி இருப்பார்கள் என்பதைச் சொல்ல வேண்டாம். வேலைக்காரர் கிடையாது வீட்டிலே. இரண்டு வேளைச் சமையல், வேலைக்காரிக் காரியம், வீட்டுக் காரியம், அனைத்தும் நான்தான் செய்கிறேன். ஆனால் என் மனம் திருப்தியாய் இருக்கிறது எத்தனை பேர் இருந்தாலும். எனக்கு என்று ஏற்பட்டிருக்கும் இந்த பொறுப்பை உணர்ந்து நான் பெருமை கொள்கிறேன். ஊக்கமுடன் சுற்றி வருகிறேன். நீ கவலைப்பட வேண்டாம்."

இந்தப் பகுதிதான் பத்மாவின் உள்ளத்திலே ஊன்றியது. "பாவம், ரொம்பக் கஷ்டப்படுகிறாள், மாமி!" என்றாள் பத்மா அங்கலாய்ப்புடன்.

"கஷ்டம்தான்; ஆனால் இந்த மட்டும் குழந்தை விவேகியாயிருக்காளே அதற்கு நான் சந்தோஷப்படணும்! சம்சாரத்துலே புகுத்தியாச்சு; நான் இப்போ வேறே என்ன நினைக்கமுடியும்? நினைக்கிறதும் நியாயமன்று!"

இவ்வாறு சொன்னாள் அம்மாளுமாமி. சலனமற்றவளாய், கடிதத்துடன் போய்விட்டாள்.

பத்மாவின் உள்ளத்திலே இரண்டு நாள்வரை, அம்மாளு மாமியும், அவள் பெண் சரசுவும் ஆட்சி செய்யலானார்கள்.

நான்கைந்து தினங்கள் சென்றன. தன் அன்னைக்குக் கடிதம் எழுதி நாளாயிற்றே என்று நினைத்துக் கொண்ட பத்மாவுக்கு. எழுதலாமா வேண்டாமா என்ற யோசனை எழுந்தது. எழுத வேண்டியதுதான் என்று அமர்ந்தாள் மேஜையருகே. ஆனால் பேனாவைப் பிடித்தபின் எழுத்து ஓடவில்லை. "என்ன எழுதுவது? இந்தக் கேள்வி விழித்துப் பார்த்தது அவளை. தனக்கு ஏற்பட்டிருந்த அலுப்பு சலிப்புயாவற்றையும் தன் அம்மாவுக்கு எழுதி தீர்ப்பது என்று போன வாரம் தீவிரமாகக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்த அவள், இன்று என்ன எழுதுவது என்ற யோசனையில் ஆழ்ந்தாள்! மோட்டுவளையைப் பார்த்தாள். ஆம், அவள் மனங் குழம்பி இருந்தாள்.

கடைசியில், அன்னைக்குக் கடிதம் எழுத வேண்டாம் என்று நிச்சயித்தாள். பொழுது போக்குக்காகவும், பேனா காகிதம் எடுத்துவிட்ட தோஷத்திற்காகவும், திருச்சியிலிருக்கும் தன் சிநேகிதி லட்சுமிக்குக் கடிதம் எழுதினாள் அவள்.

அந்தக் கடிதத்திற்கு லட்சுமி பதில் எழுதினாள். பத்மா எழுதின பத்து நாட்களில் வந்துவிட்டது விடைக்கடிதம்.

"என் மாமியார் தங்கமானவர். காலையில் சமையல் செய்துவிடுவார் - எல்லோருக்கும் பரிமாறிவிடுவார். காலைச்சமையலை என்னிடம் ஒப்புவிக்கும் வழக்கமேயில்லை - எல்லோரும் சொல்வதுபோல நான் அதிருஷ்டசாலிதான். கணவரும் மாமியாரும் என்பால் அந்தரங்கமான அன்பு கொண்டவர்கள்.

ஆனால் என் மனதிலுள்ள ஓர் குறையைச் சொல்லிவிட விரும்புகிறேன். என் நாத்திகள் இருவரும் கொஞ்சம் புஸு" ஸு". அவர்களுக்குக் குளிக்க நீர் இரைத்து வைத்து, உடுக்கவேண்டிய ஆடை வகைகள் எடுத்துவைத்து, பழைய துணிகளைத் தோய்த்து உலர்த்தி மடித்து எடுத்து உள்ளே வைத்து, இன்னும் அவர்களுடைய குழந்தைகளைக் குளிப்பாட்டி அலங்கரித்து, மற்ற குற்றேவல் பல செய்து, என் காலைப்பொழுதையும் மற்ற பொறுப்பான வேலைகளையும் வீணாக்குகிறேன். - ஆம், வீணாக்குகிறேன் பொழுதை. இவர்களுக்கெல்லாம் சிசுருஷைகள் செய்ய வேண்டியிருப்பதால், என் மாமியாருக்கு நான் செய்யும் ஒத்தாசை, குறைவு, குற்றேவல்கள் செய்வதிலேயே என் பொழுது சரியாகிவிடுவதை அறியாத அக்கம் பக்கத்தார், "அந்தப் பெண்ணுக்கு என்ன அதிர்ஷ்டம்! மாமியார் காலையிலே சமைத்துப் பரிமாறி சகலமும் செய்துவிடுகிறாள். எளிதான இரண்டு சமையல்தான் நாட்டுப்பெண்ணுக்கு!" என்கிறார்கள். அதைக் கேட்கையிலேதான் என் மனசிலே சுருக்கென்றது.

நாத்திமார்க்கான சிசுருஷைகளையும் மற்ற பொது அலுவல்களையும் இரவுச் சமையலையும் செய்வதிலே அன்றாடப்பொழுது கழிந்து போவதால், உயிருக்குயிராய் மதித்த வீணையை தொடவும் முடியாமலும், புஸ்தகம் வாசிப்போம், பாட்டுப்பாடுவோம் என்ற ஆசைகளுக்கு வழியில்லாமலும் போய்விட்டது என்றால், மாமியாருக்குக் கூடமாட இருந்து, சமையலுக்கு அரைத்துத் திரித்தாவது ஒத்தாசை செய்ய முடியக் கூடாதா? வயதானவருக்குச் செய்யாமல் யார் யாருக்கோ செய்கிறோமே என்ற என் மனக்குறை வெளியாருக்குத் தெரிகிறதா? என் மாமியார்தான் அறிவார். "எத்தனைன்னு நீயே செய்யமுடியும் அம்மா?" என்று கூறும் என் மாமியார்தான் என்னை நன்கு அறிவார். என் கணவரோ உத்தமர், விவேகி."

லட்சுமியின் இந்தக் கடிதம் படிக்கும்போது, பத்மாவுக்கு மனதை என்னமோ செய்தது. கண்களில் நீர் துளித்தது கடிதத்தை உள்ளே வைத்துவிட்டு யோசனை செய்தாள்.

அவளுடைய சிந்தனை சீறிற்று அவள் மனம் சீரிய வழியிலே செல்லத் தொடங்கிற்று.

மாலையில் வீடு வந்தான் ராஜு" அன்று காலையிலும் அவர்களிடையே ஒரு சிறு புரைசல் எழுந்திருந்தது. அதனால் அவனுடன் முகங்கொடுத்துப் பேச வெருவிய பத்மா, ஒரு காகிதத்தை அவனிடம் கொடுத்தாள். திகைப்புக் குறிப்புக் கண்களிலே தெறிக்க ராஜு" அதைப் படிக்கப் புகுந்தான். அவன் படிக்கத் தொடங்கினதும் கூச்சமுடன் இப்பால் வந்துவிட்டாள் பத்மா.

கடிதம் திடீரென்று இப்படி ஆரம்பமாயிற்று. அது பத்மாவின் எழுத்துத்தான் - அவள் பேச்சுத்தான்.

"புருஷனுக்காக மட்டும இரவு பகல் உழைத்து உடலும் உள்ளமும் உருகிப்போகிறாள் ஒரு சிநேகிதி அவள் சீதா.

"உண்மையான அதிகாரமும் சலுகையும், செல்வாக்கும் ஒரு சிலர் பால் இருக்க உழைப்புப் பொறுப்பை மட்டும்தான் ஏற்று, நானே ராணி" என்ற பெருமிதங்கொண்டு உடலை வாடிக்கொள்கிறாள் மற்றொருவள் அவள் சரசு.

"ஊரார் கண்களுக்கெல்லாம் அதிர்ஷ்டசாலியாக விளங்கும் லட்சுமி, அந்தோ, குடத்தில் விளக்கென இருக்கிறாள். அவள் கஷ்டமும், அவள் பெருமையும், யாரும் அறியார்.

"நான்? ஊரார் கண் முன்னே, வீட்டு யஜமானியாய்த் திகழ்கிறேன். "பாவம், சிறிசு. வீட்டுப் பொறுப்பெல்லாம் அவளுக்கு" என்ற புகழ் மாலை எனக்கு. சுதந்திரமாய் இந்த இல்லத்திலே ஆட்சி செலுத்தும் எனக்கு, அவர்கள் மூவரும் படும் கஷ்டத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு இல்லை.

என்னை மன்னிக்கவேணும். தங்களுக்கு ஏற்றவள் நான் இல்லை, "ராஜாத்தி" இல்லை நான், என்று நீங்கள் 'நினைக்கத்தொடங்கிவிட்டீர்களோ என அஞ்சுகிறேன் என்னை மன்னிப்பீர்களா?"

கடிதத்தைப் படித்து முடித்த ராஜு" புன்னகை பூத்தான். பத்மாவைத் தேடிக்கொண்டு வந்தான், சமையலறைக்கு.

"நீ ராஜாத்தியில்லை என்று யார் மறுக்க முடியும் பத்மா? நான் ராஜு" இல்லையோ?" என்றான் சிரிப்புடன்.

"அப்படியும் பொல்லாதவள் தானே?" என்றாள் அவள். தலை நிமிராமலே.

"இல்லை; நல்லவளுந்தான். நல்ல பசுவுக்கு ஒரு சூடு, நல்ல பெண்ணுக்கு ஒரு சொல் நீதான் இவ்வளவு சீக்கிரத்திலே உன்னை திருத்திக் கொண்டுவிட்டாயே!" என்று கூறி புன்சிரிப்புச் சிரித்தான், ராஜாத்தியின் புருஷனான ராஜு".

"நல்ல பசுவுக்கு ஒரு சூடு - ஆனால் எனக்கு மூன்று சூடு வேண்டியிருந்தது!" என்று பதிலளித்தாள் பத்மா அந்த வார்த்தைகளின் உட்கருத்து ராஜுவுக்கு விளங்கவில்லை. எனினும் சிரித்து வைத்தான்.

"ஒரு சொல்லா?" என்று நினைத்துப் பார்த்தவாறே, வெட்கமுற்றவளாய் சிரித்தாள் பத்மா. அந்தச் சிரிப்பின் அர்த்தமும் அவனுக்கு வேற்று எண்ணம் தோற்றுவித்தது! அப்போதும் ஒரு சிரிப்புச்சிரித்து வைத்தான்!

**********

(சுதேசமித்திரன், ஜூன் 19, 1949)